சார்புநீதிமன்றம், பொள்ளாச்சி

முன்னிலை: திரு.**M. மணிகண்டன், M.A., M.L., PG.D.C.F.Sc.,**

சார்பு நீதிபதி பொள்ளாச்சி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 04 ம் நாள்)

**அசல் வழக்கு எண்: 19/2025**

**TNCB11-000114-2025**

ராசு ...வாதி

/எதிராக/

1. சதீஸ்குமார்
2. பாலகிருஷ்ணன்
3. காளியம்மாள்
4. ஈஸ்வரி
5. தீபா ...பிரதிவாதிகள்

இவ்வழக்கில் வாதிக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி, பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை இந்நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், இறுதியாக 16.04.2026 ம் தேதி என் முன்பாக வரப்பட்டு வாதி தரப்பு வாதம் என்னால் கேட்கப்பட்டு இன்று வரை பரிசீலனையிலிருந்து இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்...

தீர்ப்புரை

தாவாச் சொத்தினை மூன்றில் ஒரு பங்கு (1/3) வாதிக்கு பாத்தியப்பட்டது என முதல்நிலை தீர்ப்பாணை வழங்கியும், மேற்படி தாவா சொத்தை நலந்திகடு கலந்து 3 சமபாகங்களாகப் பிரித்து அதில் வாதிக்கு ஒரு பாகம் ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கி உத்தரவிடக்கோரியும், தாவா செலவுத் தொகை கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதியின் வழக்குரையின் சுருக்கம் :</u>

2.1) வாதியும், 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளின் தகப்பனார் மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவருமான காலஞ்சென்ற செல்வகுமாரசாமிக்கவுண்டர் அவர்களும், 4 மற்றும் 5ஆம் பிரதிவாதிகளின் தாயார் காலஞ்சென்ற ரத்தினம் மற்றும் தாவாச்சொத்தின் உரிமையாளரான காலஞ்சென்ற அத்தம்மாள் (எ) அன்னம்மாள் ஆகிய நான்கு நபர்களும், காலஞ்சென்ற சின்னச்சாமி கவுண்டர் என்பவரின் வாரிசுதாரர்கள் ஆவார்கள். தாவா சொத்தும் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் காலஞ்சென்ற சின்னச்சாமி கவுண்டருக்கு கடந்த 19.03.1976ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின்படி கிடைக்கப்பெற்று ஆண்டு அனுபவித்து வந்து, அவரது இறுதி காலகட்டத்தில் தாவாச்சொத்தை அவரது மகளான அத்தம்மாள் (எ) அன்னம்மாள் என்பவருக்கு கடந்த 05.05.1994ம் தேதியன்று உயில் சாசனம் எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி சின்னசாமிக்கவுண்டர் கடந்த 21.06.1994 அன்று காலமாகிவிட்ட படியால் உயில்சாசனப்படி தாவாச்சொத்துக்கள் மற்றும் இதர பூமிகளை அத்தம்மாள் (எ) அன்னம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி அத்தம்மாள் (எ) அன்னம்மாள் என்பவர் அவருக்கு உயில் சாசனப்படி பாத்தியப்பட்ட தாவா சொத்து நீங்கலாக மீதமுள்ள சொத்துக்களை 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு கிணத்துக்கடவு சார்பதிவக அலுவலகத்தில் பத்திர எண்.BKS/194/2008ன்படி பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் ஒன்றை ஏற்படுத்தி உள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) தாவாசொத்தை பொறுத்து காலஞ்சென்ற அத்தம்மாள் (எ) அன்னம்மாள் எந்தவொரு ஏற்பாடும் செய்து வைக்காமல் கடந்த 23.02.2021 அன்று இறந்துவிட்டார் என்றும், அவரது கணவரான வெள்ளிங்கிரி கவுண்டர் கடந்த 21.01.2009 அன்று இறந்துவிட்டார் என்றும், ஆகையால் மேற்படி அத்தம்மாள் (எ) அன்னம்மாள் என்பவரின் கணவர் வெள்ளிங்கிரி கவுண்டர் இறந்துவிட்டபடியால் அவர்களுக்கு வாதியும், 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின்

தகப்பனார் மற்றும் 3ம் பிரதிவாதியின் கணவருமான காலஞ்சென்ற செல்வகுமாரசாமியும் மற்றும் 4 மற்றும் 5 பிரதிவாதிகளின் தாயார் காலஞ்சென்ற ரத்தினம் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள் என்றும், எனவே தாவா சொத்தானது வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றும், அதாவது தாவாச்சொத்துக்களில் வாதிக்கு இந்து வாரிசுரிமைச்சட்டப்படி 1/3 பங்கும், 1 முதல் 3ம் பிரதிவாதிகளுக்கு 1/3 பங்கும், 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு 1/3 பங்கு பாத்தியம் என்றும், தாவா சொத்தை வாதியும், பிரதிவாதிகளும் கூட்டு சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்படி அத்தம்மாள் (எ) அன்னம்மாள் இறந்தபிறகு பிரதிவாதிகள் மற்றும் வாதி தாவாச்சொத்தின் வருமானத்தை பகிர்ந்து கொண்டு வந்தும், நாளடைவில் எந்த தொகையும் பிரதிவாதிகள் செலுத்தாமல் நிறுத்திவிட்டனர் என்றும், தாவா சொத்துக்குண்டான வருவாய் ஆவணங்கள் காலஞ்சென்ற அத்தம்மாள் (எ) அன்னம்மாள் பெயரில் உள்ளது என்றும், வாதி பிரதிவாதிகளிடம் பலமுறை தாவாசொத்தை பாகம் பிரித்து தர கேட்டும் பிரதிவாதிகள் எந்தவித பதிலும் தெரிவிக்கவில்லை என்றும், அதனால் வாதி கடந்த 27.03.2024ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட 2ம் பிரதிவாதி எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், எனவே பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றா தரப்பினராகியுள்ளனர்.

4) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் ? இவ்வழக்கு அனுமதிக்கத்தக்தா ? இல்லையா ? என்பதேயாகும்.

5) வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை பரிசீலனை செய்யும்போது தாவா சொத்தானது ஆதியில் சின்னசாமி என்பவருக்கு வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்பதும், அவர் தாவா சொத்தினைப் பொறுத்து அத்தம்மாள் (எ) அன்னம்மாள் பெயருக்கு ஒரு வா.சா.ஆ.3 உயில்சாசனத்தை எழுதி வைத்ததின் அடிப்படையில் தாவா சொத்து அத்தம்மாள் (எ) அன்னம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவர் அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து நீங்கலாக மற்ற சொத்துக்களைப் பொறுத்து கடந்த 26.11.2008ம் தேதியன்று 1, 2 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.4 உயில்சாசனத்தை எழுதி வைத்துள்ளார் என்பதும், அதன்பின்னிட்டு அவர் கடந்த 23.02.2021ம் தேதியன்று இறந்துவிட்ட நிலையில் மேற்படி உயில்சாசனமானது அமலுக்கு வந்து இதர சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகின்றனர் என்பதும், அத்தம்மாள் (எ) அன்னம்மாளின் கணவரான வெள்ளிங்கிரி கவுண்டர் என்பவரும் இறந்துவிட்ட நிலையிலும், தாவா சொத்துக்களைப் பொறுத்து அத்தம்மாள் (எ) அன்னம்மாள் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்ட நிலையிலும் வாதியும், பிரதிவாதிகளும் இறந்துபோன அத்தம்மாள் (எ) அன்னம்மாளின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தாவா சொத்தினை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்பதும், இந்நிலையில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிக்குரிய பாகத்தை பிரித்து தராமல் காலம் கடத்தி வந்ததால் வாதி வா.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியுள்ளார் என்றும், அதன்பின்னரும் பிரதிவாதிகள் தாவா சொத்தினை பிரித்து தராததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது இந்த நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

7) இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகி வழக்கை நடத்தாத நிலையில் இந்த நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு எதிராக எதிரிடை அனுமானம் (Adverse inference) இந்திய சாட்சிய சட்டம் 114(g)–ன்படி எடுத்துக்கொள்கிறது. மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது தாவா சொத்து ஆதியில் சின்னச்சாமி கவுண்டருக்கு

பாத்தியப்பட்ட நிலையில் அவர் அதனைப் பொறுத்து அத்தம்மாள் (எ) அன்னம்மாளுக்கு உயில்சாசனம் எழுதி வைத்துள்ளார் என்பதும், மேற்படி அத்தம்மாள் (எ) அன்னம்மாளும், அவரது கணவரும் வாரிசுகளின்றி இறந்துவிட்ட நிலையில் வாதியும், செல்வக்குமாரசாமி கவுண்டரும், ரத்தினமும் இறந்துபோன அத்தம்மாள் (எ) அன்னம்மாளின் வாரிசுகள் என்பது தெரிய வருகிறது. இந்த நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் வாதத்தினையும், வழக்குரையையும் கவனமாக பரிசீலனை செய்யும்போது தாவா சொத்து வாதியின் சகோதரியான அத்தம்மாள் (எ) அன்னம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற நிலையில் அதில் வாதிக்கும் 1/3 பங்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. ஆகவே வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**முடிவாக,** தாவா சொத்தினை மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் வாதிக்கு ஒரு பாகத்தை ஒதுக்கி வழங்கக் கோரிய பரிகாரம் கிடைக்கத்ததக்கது என்று செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் பிழைகள் சரி செய்யப்பட்டு என்னால் இந் நீதிமன்றத்தில் 2026 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 17 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.04.17 17:56:03 +0530

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>

வா.சா. 1 ராசு

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 19.03.1976 | கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 14.02.1981 | பாக பத்திரம் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 05.05.1994 | உயில் சாசனம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 26.11.2008 | உயில் சாசனம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 23.02.2021 | அத்தம்மாள் (எ) அன்னம்மாளின் இறப்பு சான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.6 | 11.10.2009 | வெள்ளிங்கிரி கவுண்டரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.7 | 27.03.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.8 | – | திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் |
| வா.சா.ஆ.9 | 04.04.2024 | அஞ்சலக Track consignment கணினி நகல் |
| வா.சா.ஆ.10 | – | திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் |
| வா.சா.ஆ.11 | – | திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் |
| வா.சா.ஆ.12 | 10.01.2025 | வில்லங்க சான்றிதழ் கணினி நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.04.17 17:56:09 +0530

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

**<u>வரைவு / சீரான தீர்ப்புரை</u>**

அ.வ.எண். 19/2025

17.04.2026.